நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 96 of 2015

வழக்கு சாட்சி : PW 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தர்மராஜன் | தொழில் | : |
| தந்தை பெயர் | : நடராஜன் | | : |
| கிராமம் | : | வயது | : 59 / 2025 |
| தாலுக்கா | : | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **05.11.2025**

**(1,2 எதிரிகள் ஆஜர். )**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனது தகப்பனார் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். தகப்பனார் இறக்கும் போது அவருக்கு 81 வயது. எனது தகப்பனார் நடராஜன். எனது தகப்பனார் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணம் ஏற்படுத்தப்பட்டதற்கு முன்பே வேறு சொத்து குறித்து எனக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரி. எனது தகப்பனார் எனது பெயருக்கு 23.02.2011 ல் எனக்கு ஒரு உயில் எழுதி வைத்தார். அதனை 28.02.2012 ல் ரத்து செய்துவிட்டார் என்றால் எனது தகப்பனார் நிர்பந்தப்படுத்தப்பட்டதால் அவர் அவ்வாறு ரத்து செய்துவிட்டார். எனது தகப்பனார் எனது சகோதரர் மனோகரன் பெயருக்கு 07.04.1998 ல் எனக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரம் வைத்தார். அதனை 09.05.2011 ல் ரத்து செய்துவிட்டார் என்றால் சரி. அது வேறு ஒரு சொத்து சம்பந்தமானது. மேற்கண்ட வண்ணம் எனது தகப்பனார் சொத்துக்களை எழுதி வைப்பதும் அதனை ரத்து செய்வதுமாக சாதாரணமாக செய்து வந்துள்ளார் என்றால் சரியல்ல.

1வது எதிரிக்கு எனது தகப்பனார் எழுதி வைத்த 21.02.2013 மற்றும் 20.03.2013 தேதிகளில் முறையே இரண்டு பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரங்களை ரத்து செய்துவிட்டார் என்றால் சரி. அதனை நான் படித்து பார்த்தேன் என்றால் சரி. மேற்படி ரத்து பத்திரங்களில் தன்னை எட்டுக்குடி முருகன் கோவிலுக்கு அழைத்து சென்று

மிரட்டி செட்டில்மென்ட் பத்திரங்கள் எழுதி வாங்கிய காரணத்தால் ரத்து செய்கிறேன் என்று சொல்லி உள்ளார் என்றால் சரி. எனது சகோதரிக்கு எனது தகப்பனார் செட்டில்மென்ட் பத்திரம் வாயிலாக சொத்து கொடுத்தது எனக்கு விருப்பம் இல்லை என்றால் சரியல்ல. சொத்தை எனது தகப்பனாரை மிரட்டி எழுதி வாங்கியுள்ளார். ஆகவே, அவ்வாறு சொத்து கொடுத்தது எனக்கு விருப்பம் இல்லை. **மேற்படி எனது சகோதரிக்கு செட்டில்மென்ட் வாயிலாக கொடுக்கப்பட்ட சொத்துகளில் எனக்கும் பாகம் வேண்டுமென கோரி 26.04.2013 அன்று அ.வ.எண்.16/2013 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரி. மேற்படி என்னிடம் காட்டப்படும் வழக்குரை தான் நான் தாக்கல் செய்த வழக்குரை ஆகும். அது எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கில் எனது தகப்பனாரை 1வது பிரதிவாதியாகவும், 1வது எதிரியை 2வது பிரதிவாதியாகவும், எனது சகோதரி பவானி, அ.சா.2 மனோகர் ராஜன் 3,4 பிரதிவாதியாகவும், திருப்பூண்டி சார்பதிவாளரை 5வது பிரதிவாதியாகவும், மாவட்ட பதிவாளரை 6வது பிரதிவாதியாகவும் சேர்த்துள்ளேன். மேற்படி வழக்குரையில் நான் எனது தகப்பனாரை 1,2,3 எதிரிகள் எட்டுக்குடி முருகன் கோவிலுக்கு அழைத்து சென்று மிரட்டி செட்டில்மென்ட் பத்திரங்கள் எழுதி வாங்கியுள்ளார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரி. அதே போல் 5வது எதிரி சட்டவிதிமுறைகளை பின்பற்றாமல் பத்திர பதிவு செய்துள்ளார் என்று சொல்லவில்லை என்றால் சரி.

நான் மேற்படி அ.வ.எண்.16/2013 வழக்கை தாக்கல் செய்த பிறகு 10.06.2013 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண்.16/2013 வழக்கில் எனது தகப்பனாருக்கு அதில் கண்ட சொத்தில் பூர்ண உரிமை இல்லை என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி. தவறான வழிகாட்டுதலின் பேரில் மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்தேன். பின்னர் மேற்படி வழக்கை வாபஸ் பெற்றுவிட்டேன். இந்த வழக்கு புகாரினை என் தகப்பனார் கொடுக்கவில்லை என்றும், நான் தான் எனது தகப்பனாரின் கையொப்பம் போன்று போலியாக கையொப்பம் செய்து புகார் கொடுத்துள்ளேன் என்றும், எனது தகப்பனாரை போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.